# விளைபொருட்கள் விற்பனையில் தன்னம்பிக்கை ஏற்படுத்திய தினசரி சந்தை நிலவரம்

கே.சரவணன்

163/2 மலைமன் வீதி

கோட்டம் பாளையம் மெயின் ரோடு

திருச்சி

அலைபேசி: 9500389595



என் பெயர் கே.சரவணன் கடந்த 3 வருடங்களாக துல்லிய பண்ணைய விவசாய முறையில் இரண்டு ஏக்கரில் கத்திரி பயிரிட்டு வருகிறேன். நான் எனது விளைபொருட்களை கும்பகோணம், குளித்தலை, திருச்சி மற்றும் அருகில் உள்ள சந்தைகளில் விற்று வருகிறேன். என்னுடைய விற்பனை அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

**தினசரி சந்தை நிலவரம்**

தினசரி சந்தை நிலவரம் என்பது தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகத்தின் வேளாண் விரிவாக்க துறை இயக்கத்தால் உருவாக்கப்பட்ட ஒரு மிகச் சிறந்த திட்டம். திருச்சி சந்தை ஆய்வாளர் மூலமாக நாங்கள் இத்திட்டத்தினைப் பற்றி அறிந்து கொண்டோம். இதன் மூலம் விற்பனையில் தன்னம்பிக்கை அதிகரித்துள்ளது.

**விற்பனை:**

நாங்கள் இதுவரை விலை நிலவரத்தை கேள்விப்பட்டது எல்லாம் ஒரு யூகத்தின் அடிப்படையிலேயே இருந்தது. எனக்கு விவசாய விளைபொருள்களை விற்பதில் எனக்கு அனுபவம் குறைவாக இருந்தது. இடைத்தரகர்களின் குறுக்கீடுகளால் என்னால் சந்தை பற்றிய விவரங்களை பெற முடியாமல் இருந்தது. இதனால் நான் மிகவும் பாதிக்கப்பட்டேன். மேலும் விளைபொருள்களை சந்தையில் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனக்கு எங்கு விற்பனை செய்ய வேண்டும், ஏன் விற்பனை செய்ய வேண்டும், எப்படி விற்பனை செய்வது தரத்திற்கு ஏற்ற சரியான விலை என்ன என்பது போன்ற சந்தை தகவல்கள் கிடைக்கப் பெறாமலேயே இருந்து வந்தது. மணப்பாறை ரக கத்தரி ஒரு கிலோ ரூ.6.00 - 10.00 என்ற

அளவிலும் டிஸ்கோ ரக கத்தரி ரூ.2.00 - 4.00 என்ற அளவிலேயே இதுவரை நான் விற்பனை செய்து வந்தேன். ஆனால் தினசரி சந்தை நிலவரத்தின் மூலமாக விற்பனை செய்வதைப்பற்றி சிறந்த அறிவு கிடைத்துள்ளது. இப்பொழுது அதே விளைப்பொருள்களை ரூ.15.00 - 18.00 மற்றும் ரூ.6.00 - 10.00 என்ற முறையிலும் விற்று வருகிறேன். இது அனைத்தும் தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகம் மற்றும் உன்னத கணிப்பியம் வளர்ச்சி மையத்தின் மூலமாக சாத்தியமானது.

எதிர் காலங்களில்: ஒப்பந்த முறை விவசாய சங்கங்கள்.

நான் தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகம் தமிழகத்தின் அதிக சந்தைகளின் விவரங்களையும் விலை விவரங்களை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். எங்களைப் போன்ற விவசாயிகளுக்கு கூடுதலான சந்தைகளின் விளை நிலவரங்களையும் அனுப்பினால் பயனுள்ளதாக இருக்கும். சந்தை ஆய்வாளர்களின் சிறப்பான பணியினை பாராட்டுகிறேன்.

தினசரி சந்தை நிலவர திட்டத்தினை அறிமுகப்படுத்திய உன்னத கணிப்பியல் வளர்ச்சி மையம் மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகத்திற்கும் எங்களின் இதயம் கனிந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.